




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








செவ்வாய் ❖ ஏப்ரல். 18, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 193 ❖ ரூ.10


### தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணம் என்பது 'நகர்ப்புற மேல்தட்டுப் பார்வை'

# பிரமாணப் பத்திரம்

## திருமணம் என்பது சட்டத்தின்படியும், மதத்தின்படியும் புனிதமான ஒன்றாக, பன்முகத்தன்மை கொண்ட அமைப்பாக உள்ளது; உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு கருத்து



புதுடெல்லி, ஏப். 18-

தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்க வேண்டுமா என்பதை நாடாளுமன்றத்திடம் விட்டுவிட வேண்டும் என்றும், நீதிமன்றம் விசாரிக்கக் கூடாது என்றும் உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தன்பாலின ஈர்ப்பாளர்கள் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்க வேண்டும் எனக் கோரி தொடரப்பட்ட வழக்கை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு நேற்று பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதன் விவரம்: ''தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று கோருவது நகர்ப்புற மேல்தட்டுப் பார்வை.

தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணங்களை ஆதரிப்பதன் மூலம் ஒரு புதிய சமூக நிறுவனத்தை உருவாக்க நீதிமன்றம் முயலக் கூடாது. நீதிபதிகள் இந்தப்பணியை நாடாளுமன்றத்திடம் விட்டுவிட வேண்டும். இதுபோன்ற 'வேறு வகை' திருமணங்களை சமூக ரீதியாகவும்,மதரீதியாகவும் ஏற்றுக்கொள்வதா வேண்டாமா என்பது குறித்து மக்கள் முடிவு செய்வார்கள். ஒரு புதிய சமூக நிறுவனத்தை உருவாக்குவதற்கு உரிமை உண்டு என்பதாகவோ அல்லது அது தனி நபர் விருப்பம் என்பதாகவோ உரிமை கோர முடியாது. இது அடிப்படை உரிமையாகாது. தனி நபரின் விருப்ப உரிமையில் தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்தை அங்கீகரிப்பதற்கான உரிமை இல்லை.

நகர்ப்புற மேல்தட்டு பார்வையுடன் கூடிய மனுக்கள் தாக்கல் செய்யப்படும்போது, அந்த மனுக்களின் அடிப்படையில் மட்டுமே நீதிமன்றம் தீர்ப்பளிக்கும். கிராமப்புற மக்கள் மற்றும் சிறிய நகரங்களில் வாழும் மக்களின் கருத்துகள், அவர்களின் குரல்கள், மதப் பிரிவுகள், தனிப்பட்ட சட்டங்கள், பழக்கவழக்கங்கள், மற்ற திருமண முறைகள் மீது தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணம் ஏற்படுத்தும் விளைவுகள் என விரிந்த பார்வையில் இதனைப் பார்க்க வேண்டும்.

தற்போது திருமணம் என்பதுசட்டத்தின்படியும், மதத்தின்படியும் புனிதமான ஒன்றாக, பன்முகத்தன்மை கொண்ட அமைப்பாக உள்ளது. தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்டால், அது ஒவ்வொரு குடிமகனின் நலன்களையும் தீவிரமாக பாதிக்கும். பாலியல் உறவுக்கான தேர்வு மற்றும் பிறரின் தலையீடு இல்லாமல் இருப்பதற்கான உரிமை போன்ற அடிப்படை உரிமைகள் ஏற்கெனவே திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019-இன் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஆனால், தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணங்களுக்கு சட்ட ரீதியாக அங்கீகாரம் அளிக்கும் விவகாரம் குறித்து முடிவு எடுப்பதை அதற்கான சட்டமன்றம்/ நாடாளுமன்றம் மட்டுமே செய்யப்பட முடியும். நீதித்துறை தீர்ப்பால் அல்ல'' என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் பின்புலம்: முன்னதாக, மத்திய அரசு தாக்கல் செய்த அறிக்கையில், தன்பாலின ஈர்ப்பாளர்களுக்கு இடையிலான திருமணத்தை அங்கீகரிப்பது, ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக விழுமியங்களிலும் பல்வேறு மதங்களின் தனிச் சட்டங்களுக்கு இடையிலான சமநிலையிலும் பெரும் சேதத்தை விளைவித்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக நாடாளுமன்றம்தான் முடிவெடுக்க வேண்டும் என்றும்அரசுகூறியிருந்தது. ஆனால், சமூகத்தில் மிகப்பெரிய தாக்கம் செலுத்தக்கூடியதும், சட்டம்-அரசமைப்பு தொடர்பான முக்கியமான கேள்விகளை உள்ளடக்கியதுமான இந்த விவகாரத்தை அரசமைப்பு அமர்வின் விசாரணைக்கு உட்படுத்துவதேசரியானது என்கிற முடிவை உச்ச நீதிமன்றம் எடுத்திருந்தது.

2018-இல் நவ்தேஜ் சிங் ஜோஹர் வழக்கில் உச்ச நீதிமன்றம், '18 வயதைக் கடந்த தன்பாலின ஈர்ப்பாளர்களுக்கு இடையிலான பரஸ்பர சம்மதத்துடன் கூடிய பாலியல் உறவு குற்றம் அல்ல' என்று தீர்ப்பளித்தது. இதன் மூலம் தன்பாலின ஈர்ப்பாளர்கள் தங்களது பாலின ஈர்ப்பை மறைத்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

ஆனால், பிற உரிமைகளைப் பெறுவதற்கு அவர்கள் நீண்ட போராட்டத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. திருமணம் செய்துகொண்டோ செய்துகொள்ளாமலோ இணைந்து வாழ்தல் என்பது காதல் உறவின் இயற்கையான நீட்சி. இந்தியா உள்ளிட்ட நாடுகளில் திருமணம் செய்துகொண்ட இணையர்களுக்குக் கூட்டு வங்கிக் கணக்கு தொடங்கிக்கொள்வது தொடங்கிகுழந்தைகளைத் தத்தெடுத்துக்கொள்வது, சொத்தில் பங்கு கோருவது வரையிலான பல உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

தன்பாலின இணையர்களுக்கிடையிலான திருமணம் சட்டப்படி செல்லாது என்பதால் அவர்களுக்கு இந்த உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பெரும்பாலான தனிச் சட்டங்கள் மதங்கள், சாதிகளைக் கடந்த திருமணங்களையும் அங்கீகரிப்பதில்லை. அதுபோன்றதிருமணங்கள் சிறப்புத் திருமணச் சட்டம் 1954இன் கீழ் பதிவுசெய்யப்படுகின்றன. தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணங்களையும் அதன் கீழ் கொண்டுவருவது குறித்து மத்திய அரசு திறந்த மனதுடன் பரிசீலிக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்கள் மீறப்படும்போது சமூக அமைதி சீர்குலையும் என்கிற மத்திய அரசின் கவலையைப் புறந்தள்ளிவிட முடியாது.

அதேநேரம் சாதி, மதம், இனம், பாலினம் ஆகியவை சார்ந்த பாகுபாடுகளைக் களைவதைப் போலவே பாலின ஈர்ப்பு, பாலியல் தெரிவு ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகளைக் களைய வேண்டியதும் அரசின் கடமைதான். இதை உணர்ந்து தன்பாலின ஈர்ப்பாளர்களின் திருமணத்தை அங்கீகரிப்பது தொடர்பான தனது முடிவை மத்திய அரசு மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். தன்பாலின ஈர்ப்பாளர்கள் குறித்த சமூகத்தின் மனநிலையும் மாற வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வந்தது நினைவுகூரத்தக்கது.

## சைகை மொழியில் சட்டப்பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பு ஒளிபரப்பை முதல்வர் தொடங்கி வைத்தார்



சென்னை , ஏப். 18-

மாற்றுத்திறனாளிகள் புரிந்து கொள்ளும் வகையில், சைகை மொழியில் சட்டப்பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பினை ஊடகங்கள் மூலமாக ஒளிபரப்பு செய்திடும் நிகழ்வை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், தமிழக சட்டப்பேரவைச் செயலகத்தின் சார்பில் செவித்திறன் மாற்றுத்திறனாளிகள் புரிந்து கொள்ளும் வகையில், சைகை மொழியில் சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பினை ஊடகங்கள் மூலமாக ஒளிபரப்பு செய்திடும் நிகழ்வினை சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் 2016-ல் வலியுறுத்தியுள்ளவாறு, மாற்றுத்திறனாளிகளுக்கு பொது இடங்களில் தடையற்றச் சூழலை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. செவித்திறன் மாற்றுத்திறனாளிகளின் தகவல் பரிமாற்றத்திற்காக, மாவட்ட ஆட்சியர்களால் நடத்தப்படும்கூட்டங்கள் உட்பட அனைத்து அரசு பொது நிகழ்ச்சிகளிலும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் சைகைமொழி பெயர்ப்பாளர் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, தற்போது நடைபெறும் 2023-24ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடர் நிகழ்ச்சிகளை செவித்திறன் மாற்றுத்திறனாளிகளும் தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் சைகைமொழி பெயர்ப்பாளர் மூலமாக சைகை விளக்க காணொளி தயாரித்து செய்திமக்கள்தொடர்புத் துறை வாயிலாக ஊடகங்களில்ஒளிபரப்பு செய்திட நடவடிக்கை எடுக்க முதல்வர் ஆணையிட்டார்.

இதன்படி, செவித்திறன் மாற்றுத் திறனாளிகள் அறிந்துகொள்ளும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிகழ்வுகளின் தொகுப்பு, YouTube மூலமாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் ஒளிபரப்பு செய்திடும் வகையில், சைகை மொழியில் பதிவு செய்து வழங்கும் நிகழ்வினை சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு முன்னிலையில், முதல்வர் தொடங்கி வைத்தார்.என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களவைத் தேர்தலுக்கு அதிமுக தலைமையில் மெகா கூட்டணி – எடப்பாடி பழனிசாமி



சென்னை , ஏப். 18-

அதிமுகவின் பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் இளங்கோவன் அண்மையில் கொலை செய்யப்பட்டார், இதை தொடர்ந்து அவரது இல்லத்திற்கு சென்று அவரின் படத்தை முன்னாள் முதலமைச்சரும் அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிச்சாமி திறந்து வைத்தார்.

இதையடுத்து செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி கூறியதாவது, "கொலை செய்யப்பட்ட இளங்கோவின் குடும்பத்திற்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் இருக்கிறது. அவரது குடும்பத்திற்கு காவல்துறை பாதுகாப்பு வழங்க வேண்டும். திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு பிரச்னை தொடர்ச்சியாக இருந்து வருகிறது, இது நிச்சயம் நாடாளுமன்ற தேர்தலில் எதிரொலிக்கும்" என தெரிவித்தார்.

மதுரையில் நடக்கக்கூடிய அதிமுக மாநாட்டில் கூட்டணி கட்சிகள் பங்கேற்கமா என்ற கேள்விக்கு, 'மதுரை மாநாடு அகில இந்திய தலைவர்களை திரும்பிப் பார்க்க வைக்கும் மாநாடாக அமையும். வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கு அதிமுக தலைமையில் மெகா கூட்டணி அமையும்' என கூறினார்.

மேலும், 'அதிமுகவில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வருகிறது இரண்டு மூன்று மாதங்களில் அந்த பணிகள் முடிந்தவுடன் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளேன்.

## ஆர்.எஸ்.பாரதி என்னிடம் ரூ.500 கோடி கேட்கிறார் எதையும் எதிர்கொள்ள தயார் – அண்ணாமலை



சென்னை , ஏப். 18-

திமுக சொத்து பட்டியல் விவகாரத்தில் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள தயாராக இருப்பதாகபாஜகமாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளர்.

முதலமைச்சர் ஸ்டாலின் உள்ளிட்டோர் மீது அவதூறு பரப்பியதாக பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையிடம் 500 கோடி ரூபாய் நஷ்டஈடு கேட்டு திமுக நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இந்நிலையில், இதற்கு பதிலடி கொடுத்துள்ள அண்ணாமலை, கோடிகளில் சொத்துகளை குவித்து வைத்திருக்கும் திமுகவினர் இருக்கும்போது, தன்னிடம் மேலும் 500 கோடி ரூபாய் வழங்கும்படி ஆர்.எஸ் பாரதி கேட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தாங்கள் வெளியிட்டுள்ள சட்ட அறிக்கையில், திமுகவினருக்கு சொந்தமான 3,478 கோடி ரூபாய் மதிப்பிலான பள்ளிகளும், 34,184 கோடி ரூபாய் மதிப்பிலான கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களின் மதிப்பு பொய்யானது என்று தெரிவித்து விட்டு, அடுத்த வரியில், ஒருவர் திமுக உறுப்பினர் அல்லது நிர்வாகியாக இருந்தாலும், அவருக்குச் சொந்தமான சொத்துகள் மற்றும் நிறுவனங்கள், கட்சியின் சொத்தாக மாறாது என்று குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், திமுகவினருக்கு சொந்தமான பள்ளிகளில் வசூலிக்கும் கல்விக் கட்டணத்தை, திமுக தலைமையகமான அறிவாலயத்தில் ஒப்படைக்கிறார்கள் என்று தெரிவிக்கவில்லை என்றும் கூறியுள்ளார்.

கடந்த திமுக ஆட்சிக் காலத்தில், சென்னை மெட்ரோ ரயில் தொடர்பாக நடைபெற்ற ஊழல் குறித்து அனைத்து ஆதாரங்களையும் சிபிஐயிடம் அளிக்க உள்ளதாகவும், தங்கள் கட்சியின் தலைவருக்கும், இந்த ஊழலில் தொடர்புடைய அனைவருக்கும் விளக்கம் கேட்டு சம்மன் வரும் வரை, ஆர்.எஸ்.பாரதி பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் அண்ணாமலை கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், ஆருத்ரா நிதி நிறுவனத்திடம் 84 கோடி ரூபாய் தான் பெற்றுக்கொண்டதாக ஆதாரமற்ற பொய் குற்றச்சாட்டை சுமத்தியதற்காக திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியிடம் 500 கோடியே ஒரு ரூபாய் இழப்பீடாக கோருவதாகவும், அடுத்த 48 மணி நேரத்தில், தன் மீதும் தனது கட்சியின் மீதும் சுமத்தப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளிக்காவிட்டால், ஆர்.எஸ்.பாரதி மீது தகுந்த வழக்கு தொடுக்கப்படும் என்றும் அண்ணாமலை கூறியுள்ளார்.

## 67–வது ஜூனியர் தேசிய பூப்பந்தாட்ட போட்டிகள்



சென்னை , ஏப். 18-

மகாராஷ்டிரா மாநிலம், அகோலா மாவட்டத்தில் உள்ள முர்த்திசப்பூர் என்ற இடத்தில் கடந்த மார்ச் 30 ம் தேதி முதல் ஏப்ரல் 3-ம் தேதி வரை நடைபெற்றது.

இதில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 28 அணிகள் பங்கேற்றன. இதில் ஐந்து பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் தமிழ்நாடு பூப்பந்தாட்ட கழக வீரர்கள் நான்கு பிரிவுகளில் முதல் இடத்திலும், ஒரு பிரிவில் மூன்றாம் இடத்தையும் பெற்று ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினர்.

இதில் தமிழக அணி சார்பில் திருவொற்றியூரில் பயிற்சி பெற்ற 20 வீரர், வீராங்கனைகள் பங்கேற்று வெற்றி பெற்றனர் மற்றும் தெலுங்கானா மாநிலத்தில் வாரங்கல் மாவட்டத்தில் மஞ்சேரி என்ற இடத்தில் பிப்ரவரி 16.02.2023 முதல் 20.03.2023 வரை சப் ஜூனியர் பிரிவில் தமிழக பூப்பந்தாட்ட அணி தேசிய பட்டயப் போட்டியில் பங்கு பெற்று அனைத்துப் பிரிவுகளிலும் ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தை பெற்று வெற்றி வாகை சூடினர் அவர்களுக்கு தமிழ்நாடு மாநில பூப்பந்தாட்ட கழகம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட பூப்பந்தாட்ட கழகம் சார்பில் சென்னை திருவொற்றியூரில் பூந்தோட்டம் பள்ளி வளாகத்தில் பாராட்டு விழா நடைபெற்றது

இதில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பொன்னாடை அணிவித்து விலை உயர்ந்த ஸ்மார்ட் வாட்ச் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பூப்பந்தாட்ட செயலாளர் வே.எழிலரசன் திருவள்ளூர் மாவட்ட பூப்பந்தாட்ட கழகத்தின் தலைவர் மதியழகன், பூப்பந்தாட்ட கழகத்தின் பொருளாளர் பார்த்திபன், சமூகசேவகர் கோடீஸ்வரன், குரு சுப்பிரமணி, தேரடி செ. நந்தா ,ஆர்.சி ஆசைத்தம்பி தொழிலதிபர், போட்டோ கண்ணன், ஏ.ரஜினி தயாளன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# துபாய் தீ விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் குடும்பங்களுக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க அன்புமணி கோரிக்கை

சென்னை , ஏப்,18_

துபாயில் அடுக்குமாடி வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் குடும்பங்களுக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து நேற்று அவர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்: "துபாய் அடுக்குமாடி வளாகத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டம்,ராமராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த இமாம் காசீம், குடு என்கிற முகமது ரபிக் ஆகிய இரு தமிழர்கள் உள்ளிட்ட 16 பேர் உயிரிழந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயிரிழந்த இமாம் காசீம், குடு என்கிற முகமது ரபிக் ஆகிய இரு தமிழர்களின் உடல்களை உடனடியாக சொந்த ஊருக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்." என அன்புமணி கூறியுள்ளார்.

முன்னதாக துபாய் நாட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இளைஞர்கள் திறனை வளர்த்து கொண்டால்

# வேலைவாய்ப்பை பெறலாம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தகவல்

சென்னை , ஏப்,18_

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை தொழில் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு இடையான விளையாட்டுப் போட்டிகள் நேரு விளையாட்டு அரங்கத்தில் நேற்று நடந்தது. போட்டியினை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து பேசியதாவது:- வேலைவாய்ப்பு பயிற்சி முகாம்களை தொடர்ந்து நடத்தி எண்ணற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் ஒரு லட்சமாவது பணி ஆணையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் வழங்கினார். தற்போது அந்த எண்ணிக்கை 1,44,000 ஆக உயர்ந்து வருகிறது. விரைவில் 1.5 லட்சம் மற்றும் 2 லட்சம் என்ற எண்ணிக்கையை இது எட்டப் போகிறது.



அதிக எண்ணிக்கையிலானபயிற்சிமுகாம்கள் மூலம் ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. எனது தொகுதியான திருவல்லிக்கேணியில் மட்டும் பல நிகழ்ச்சிகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னெடுத்து வருகிறார். இளைஞர்கள் திறன்களை வளர்த்துக் கொண்டால் மட்டுமே வேலைவாய்ப்பு என்ற விஷயத்தை பெற முடியும். இந்நிலையில் மாவட்ட அளவிலான என்ற நிலையை கடந்து ஐடிஐ மாணவர்களுக்கு மாநில அளவிலான போட்டி இன்று தொடங்கி வைக்கப்படுகிறது. 102 அரசு ஐடிஐ களில் 92 சதவீத மாணவர் சேர்க்கை நடந்துள்ளது. இது தமிழக வரலாற்றிலேயே மிகப்பெரிய சாதனை ஆகும். மாணவர்கள் உடல் ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டும் வகையில் மாநில மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடந்து வருகிறது. இதுவரை பள்ளி கல்லூரிகளில் மட்டுமே விளையாட்டு போட்டிகள் நடந்து வந்த நிலையில் முதல் முறையாக மாநில அளவில் ஐடிஐ மாணவர்களுக்கான விளையாட்டு போட்டி நடைபெறுவது மிக முக்கியமானது.

விளையாட்டு போட்டிக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூ.50 கோடி ஒதுக்கி இருக்கிறார். விளையாட்டுத்துறை அமைச்சராக நான் பொறுப்பேற்றது முதல் இந்த நேருஸ்டேடியத்திற்கு வாரத்துக்கு மூன்று தடவை வந்து விடுகிறேன். இவ்வாறு அவர் பேசினார். பின்பு அணி வகுப்பில் பங்கேற்று முதலிடம் பெற்ற சென்னை மண்டல மாணவ மாணவிகளுக்கு கோப்பையை பரிசாக வழங்கினார். பின்பு கேரம் போர்டு, செஸ், இறகு பந்து விளையாடி மாணவ மாணவிகளை ஊக்குவித்தார் ஆணையாளர் வீரராகவராவ் வரவேற்றார். அரசு கூடுதல் செயலாளர் முகமது நசிமுதீன் திட்ட விளக்க உரையாற்றினார். நிகழ்ச்சியில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை அமைச்சர் சி.வி. கணேசன், அமைச்சர் சேகர்பாபு, தயாநிதி மாறன், எம்.பி, பரந்தாமன் எம் எல் ஏ ,மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ் குமார், அரசு செயலாளர்கள் அதுல்ய மிஸ்ரா, மேகநாத ரெட்டி உள்பட பலர் கலந்து கொண்டனர்.




### தென்காசி மாவட்டம் புளியங்குடியில் எஸ்டிபிஐ கட்சி சார்பாக

# சமூக நல்லிணக்க இஃப்தார் நோன்பு நிகழ்ச்சி




தென்காசி,ஏப்.18–

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் எஸ்டிபிஐ கட்சி சார்பாக சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி தேவர் சமுதாய நல கூட்டத்தில் நடைபெற்றது.

தலைமை எ.அகமது நகரத் தலைவர், வரவேற்புரை எம். அப்பாஸ் நகரச் செயலாளர், தொகுப்புரை எம். நவாஸ்கான் நகரச் செயற்குழு உறுப்பினர், முன்னிலை சிக்கந்தர் மாவட்ட பொது செயலாளர், திவான் ஒலி மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர், இம்ரான் நகர இனச் செயலாளர் ஜமாத் கமிட்டி உறுப்பினர், எம். அப்பாஸ் நகரச் செயற்குழு உறுப்பினர், முஹம்மது யாசீன் நகரச் செயற்குழு உறுப்பினர், செய்யது மஹ்மூத் மாவட்ட துணைத் தலைவர், நூர் முகமது மாவட்டச் செயலாளர், முஹம்மது கனி மாவட்டச் செயற்குழு உறுப்பினர், வஹ்ஹாப் நகர துணைத் தலைவர், தமீம் அன்சாரி நகர இணைச் செயலாளர், சிக்கந்தர் நகரச் செயற்குழு உறுப்பினர், ராஜா முஹம்மது நகரச் செயற்குழு உறுப்பினர், சிறப்பு அழைப்பாளர்கள் எம். நிஜ முகைதீன் மாநில பொதுச் செயலாளர் எஸ்டிபிஐ, விஜயா சௌந்தரபாண்டியன் நகர் மன்றத் தலைவி புளியங்குடி, எ. அந்தோணிசாமி நகர் மன்றத் துணைத் தலைவர், நகரச் செயலாளர் திமுக, மௌலல் கௌமி, ரிசவப்பா, முஹம்மது புகாரி, செய்யது அலி, கலீலூர் ரஹ்மான், சார்லஸ், மருத்துவர்பி. ரவீந்திரன், ராஜாசிங், சாகிர் உசேன், வெள்ளத்துரை, சுரேஷ் குமார், வேலு ஜெய்னுல் ஆபிதீன், மைதீன் பிச்சை, சின்ன ராஜ், செய்யது சுலைமான், அப்துர் ரஹ்மான், முகைதீன், முகமது ரஃபிக், பரமேஸ்வர பாண்டியன், அப்துல்ரகுமான், மகாலிங்கம், செய்யத் அலி பாதுஷா, ஜாகிர் உசேன், முஹம்மது முஹைதீன், ராமகிருஷ்ணன், மாரியப்பன், ஈஸ்வரன், முகைதின் சதாம் உசேன், மவுதப்பா சுரேஷ், மாரிச்செல்வம், செந்தாமரை, ஆகியோர் கலந்துகொண்டு நன்றி உரை சார்ஜ் நகர பொருளாளர் அனைவரையும் வரவேற்று சிறப்பான பிரியாணி விருந்து அளித்து உபசரித்தனர்.

# புதுக்கோட்டைமாவட்ட வர்த்தக கழகம் சார்பில் இஃப்தார் விருந்து வழக்கமான உற்சாகத்துடன் நடந்தது

புதுக்கோட்டை , ஏப்,18_

புதுக்கோட்டை மாவட்ட வர்த்தக கழகத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி வழக்கமான உற்சாகத்துடன் இந்தாண்டும் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.



புதுக்கோட்டை மாவட்ட வர்த்தக கழகம் பல வருடங்களாக தொடர்ந்து நடத்தி வரும் இஃப்தார் ( நோன்பு திறப்பு)விருந்து நிகழ்ச்சி வர்த்தககழகசில்வர்ஹால் திருமண மண்டபத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது. வர்த்தக கழக தலைவர் சதர்ன் எம்.சாகுல் ஹமீது தலைமையில் செயலாளர் சாந்தம் எஸ்.சவரிமுத்து வரவேற்புரையாற்ற கூடுதல் செயலாளர் ஆர்.சம்பத்குமார் விழா தொகுத்து வழங்கினார்.

அரபிக்கல்லூரி முதல்வர் அல்ஹாஜ் எஸ்.அப்துல் ஜப்பார் பாகவி,திரு இருதய ஆண்டவர் ஆலய பங்கு தந்தை எ.சவரிநாயகம் அடிகளார்,திலகவதியார் ஆதீனம் தயானந்த சந்திரசேகர் சுவாமிகள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள், மாவட்ட வர்த்தக கழக துணைத்தலைவர் எஸ்.எ.முகம்மது அஷ்ரப்அலி நோன்பு திறக்கும் துஆ ஓதினார், மாவட்ட வர்த்தக கழக நிர்வாகிகள் ஆர். சேவியர், ஆலங்குடி எ.டி. மன்மோகன்,பரம்பூர் எம்.முகம்மது பாருக், எஸ்.ராஜ்குமார், பொன்னமராவதி எஸ்.கே.எஸ். பழனியப்பன்,எஸ். தியாகராஜன்,ஜெ. ஜாகிர்உசேன்,மற்றும் இணைப்பு சங்க நிர்வாகிகள்,எ.எம். எஸ்.இப்ராஹிம் பாபு,நகர்மன்றஉறுப்பினர் ராஜாமுகம்மது,பெரிய பள்ளி செயலாளர் ராஜா தாஜ்முகம்மது, ஒப்பந்தகாரர் பண்ணீர் (எ)சாகுல்அமீது,மற்றும் வர்த்தக பிரமுகர்கள், ரோட்டரி சங்க நிர்வாகிகள், திரளாக கலந்து கொண்டனர் ,மாவட்ட வர்த்தக கழக துணைத்தலைவர்கள் எஸ்.தியாகராஜன்,ஆர். வைரவன்,கேஎல்கேஎஸ் ராஜாமுகம்மது,கே. எஸ்.முகம்மது இக்பால், துணைச்செயலாளர்கள் எ.கே.ஹபிபுல்லா,கே. திருப்பதி, ஆர்,ஆரோக்யசாமி,பி. எல்.பசுபதி, ஆர். விவேகானந்தன்,எஸ். ஹெச்.சையதுநசீர்,எம். சையதுஇப்ராஹிம், அருணாச்சலம்,எம். பூபாலன்,பி.பிரகாஷ் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்க, ஆரம்பமாக மாஸ்டர் எ.முகம்மது அஸ்லம் கிராஅத் ஓத மாவட்ட வர்த்தககழகபொருளாளர் எஸ்.கதிரேசன் நன்றி கூற நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

### மக்களைத் தேடி மனுக்கள் பெறும் முகாமில்

# 2385 கோரிக்கை மனுக்கள் : விரைந்து தீர்வு காணப்படும் அமைச்சர் பேச்சு

கள்ளக்குறிச்சி, ஏப்,18_

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சு.கொளத்தூர், தேவபாண்டலம், கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிறுவங்கூர் மற்றும் உலகங்காத்தான், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எலவனசூர் கோட்டை,களமருதூர் ஆகிய ஊராட்சிகளில் மக்களைத்தேடி மனுக்கள் பெறும் முகாம் நேற்று நடைபெற்றது.



இம்முகாம்பொதுப்பணிகள்,நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷ்ரவன்குமார் தலைமையில், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் மக்களைத்தேடி மனுக்கள் பெறும் முகாம் வாயிலாக பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன, நடைபெற்ற மக்களைத் தேடி மனுக்கள் பெறும் முகாமில் சங்கராபுரம் சட்டமன்ற தொகுதியில் 631 கோரிக்கை மனுக்களும், கள்ளக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் 866 மனுக்களும், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் 888 மனுக்களும் பெறப்பட்டன, இம்மனுக்கள் மீது உடனடியாகநடவடிக்கை எடுக்க தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது, அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்ட மனுக்கள்மீது உடனடியாக தீர்வு காணப்படும், தீர்வு காணப்படாத மனுக்கள் தொடர்பாக மனுதாரர்களுக்கு உடனடியாக பதில் அளிக்கப்படும்மென அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக மாடாம்பூண்டி கூட்டுச்சாலையில் மகளிர்களுக்கான இலவச பேருந்து, மற்றும் கள்ளக்குறிச்சியிலிருந்து திருவண்ணாமலை வழியாக பெங்களூர் செல்லும் புதிய பேருந்து வழித்தடத்தினையும் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மோகன்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சத்தியநாராயணன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி, வேளாண்மை இணை இயக்குனர் கருணாநிதி, துணை இயக்குநர் சுகாதார பணிகள் ராஜா, கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் பவித்ரா, திருக்கோவிலூர் வருவாய் கோட்டாட்சியர் யோகஜோதி, கண்காணிப்பு பொறியாளர் (நெடுஞ்சாலை) பழனி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் மோகனசுந்திரம், அனைத்து ஒன்றிய குழு பெருந்தலைவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைத்து துறை அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆக்யோர் கலந்து கொண்டனர்.

### மீமிசல் அருகே கோபாலபட்டினத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக

# மதநல்லிணக்க அடிப்படையில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து இப்தார் நோன்பு திறப்பு



புதுக்கோட்டை, ஏப்.18–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள கோபாலபட்டினம் கிராமத்தில்மதநல்லிணக்க அடிப்படையில் முஸ்லிம் இந்து கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து இப்தார் நோன்பு திறக்கப்பட்டது இதில் ஜமாத் தலைவர் செய்யது முகமது, முகமது அலி ஜின்னா, முகமது உசேன், சேக் முகமது, ஆகியோர் ஏற்பாட்டின் பேரில் ஜமாத்தார்கள் ஒன்றிணைந்து அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன் பரிந்துரையின் படி ஆவுடையார் கோவில் தெற்கு வட்டாரத் தலைவர் கூடலூர் முத்து, மேற்கு வட்டாரத் தலைவர் வழக்கறிஞர் விஸ்வநாதன், அறந்தாங்கி நகரச் செயலாளர் வீராசாமி, அறந்தாங்கி நகர மன்ற உறுப்பினர் கிருபாகரன், அசாருதீன் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் செல்வம், அப்துல் மஜீத், மதியழகன் மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் முரளி, ஆனந்த், மணமேல்குடி தெற்குவட்டாரத்தலைவர் மன்னார் பாப்புலர் மெட்ரிகுலேஷன் பள்ளி தாளாளர் யூசுப் மற்றும் திரளான இந்துக்கள் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்கள் இந்த இப்தர் நோன்பில் கலந்து கொண்டனர்.

இப்தார் நோன்பு இந்த கோபாலபட்டினம் ஜமாத்தில்வருடம்தோறும் மத நல்லிணக்கத்தின் அடிப்படையில் நடைபெறும் என்பதனை அங்கு உள்ளவர்கள் கூறுகின்றனர், இந்த மத நல்லிணக்க இப்தர் நோன்பு திறக்கையில்ஆப்பிள்,திராட்சை,பேரீச்சம் பழம், வடை, பிஸ்கட், ரஸ்னா, நோன்பு கஞ்சி கொடுத்து நோன்பு திறக்கப்பட்டதுநிறைவாக நன்றியுரை கூறியவர் அமீர் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகி ஆவார்.



காரைக்கால் மாவட்ட ஆட்சியரகத்தில் இன்றைய குறை கேட்பு கூட்டத்தில் ஒரு சில மனுக்கள் பெறப்பட்டன. இதில் மண்டபத்தூர் உள்ளிட்ட மீனவ கிராமங்களில் சாலை வசதி பேருந்து நிழற்குடை ன குடிநீர் கேட்டு பொதுமக்கள் மனு அளித்தார்கள். மேலும் கீழகாசாகுடியில் சிறு பிள்ளைகள் மற்றும் வயதானவர்களை தெரு நாய்கள் கடித்து துன்புறுத்துவதாகவும் அவற்றை அப்புறப்படுத்தி தரும்படியும் பொதுமக்கள் மனு அளித்தார்கள். இம்மனுக்களை வட்டாட்சியர் முத்து பெற்றுக்கொண்டு மாவட்ட ஆட்சியரிடம் இது சம்பந்தமாக பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியரின் செயலர் பாலு (என்கிற) பக்கிரிசாமி உடன் இருந்தார்.

# மயிலாடுதுறையில் மாற்று கட்சியினர் அதிமுகவில் இணையும் விழா

## கோமல் அன்பரசன் ஏற்பாட்டில் 800 பேர் இணைந்தனர்



மயிலாடுதுறை, ஏப். 18 –
அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் மாநில இளைஞரணி செயலாளராக இருந்த கோமல் ஆர். கே.அன்பரசன் கடந்த மாதம் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் தன்னை அதிமுகவில் இணைத்துக் கொண்டார். தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் அதிமுகவில் இணைந்தனர்.

அதன்தொடர்ச்சியாக மயிலாடுதுறை மாவட்டத்தைச் சார்ந்த அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் கிளை, வார்டு செயலாளர்கள், பொறுப்பாளர்கள் கட்சியில் இணையும் விழா மயிலாடுதுறையில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அதிமுக செயலாளரும், பூம்புகார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். பவுன்ராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் ஓ.எஸ். மணியன் முன்னிலையில் கோமல் அன்பரசன் ஏற்பாட்டில் 800-க்கும் மேற்பட்டவர்கள் தங்களை அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், அதிமுக அமைப்பு செயலாளருமான ஓ.எஸ் மணியன் பேசும்போது, புரட்சித் தலைவர் எம்ஜிஆர் கொண்டு வந்த கொடி யார் கையில் இருக்கிறதோ, இரட்டை இலை சின்னம், தலைமை அலுவலகம் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் தான் உண்மையான அதிமுக. தற்போது இவை அனைத்தும் பொதுச் செயலாளர் எடப்பாடி கையில் இருக்கிறது. மற்றவர்கள் நீதிமன்ற படிகளில் ஏறி இறங்குவதால் எந்த பிரயோஜனமும் இல்லை. அதிமுக தொண்டர்கள் யார் பெயரை ஓங்கி ஒலிக்கிறார்களோ அவர்தான் அதிமுக பொதுச்செயலாளராக இருக்க முடியும் என்று பேசினார்.

தொடர்ந்து 800-க்கும் மேற்பட்டோர் தங்களை அண்ணா திமுகவில் இணைத்துக்கொண்டனர். அவர்களுக்கு ஓ.எஸ்.மணியன் சால்வை அணிவித்து வரவேற்பு தெரிவித்து குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

# எஸ்.டி.பி.ஐ கட்சி சார்பில் சமூக நல்லிணக்க இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி




ஊத்துக்கோட்டை, ஏப். 18 –
திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி எஸ்.டி.பி.ஐ கட்சியின் சார்பில் கும்மிடிப்பூண்டியில் நேற்று முன்தினம் சமூக நல்லிணக்க இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கும்மிடிப்பூண்டி தொகுதியின் தலைவர் அப்துல்ரஜாக் தலைமை தாங்கினார். தொகுதி பொருளாளர் முகமது ஷாஜஹொன், தொகுதி செயலாளர் இக்பால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மாநில தலைவர் கிண்டி அன்சாரி, அதிமுகவை சேர்ந்த திருவள்ளூர் வடக்கு மாவட்ட செயலாளரும், பொன்னேரி தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சிறுணியம் பி.பலராமன் ஆகியோர் கலந்து கொண்டு சமூக நல்லிணக்க இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினர்.

இதில் கட்சி நிர்வாகிகள் உமர்பாருக், கனி பாஞ்சுபீர், முகமது பயாஸ்கான், சுல்தான், முகமது ரியாஸ்கான், கமால்பாஷா, சதீஷ்குமார், இஸ்மாயில், சையது ஆசிக், அதிமுக பொதுக்குழு உறுப்பினர் ஆர். அபிராமன், கும்மிடிப்பூண்டி ஒன்றிய குழு தலைவர் கே.எம். எஸ்.சிவகுமார் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# காரைக்கால் புதிய பேருந்து நிலையம் அருகே மூத்த செய்தியாளர் சுப்பிரமணியனுக்கு நினைவேந்தல்



காரைக்கால் , ஏப். 18 –
புதுச்சேரி மாநிலம் காரைக்கால் புதிய பேருந்து நிலையம் அருகே காரைக்கால்சேம்பர் ஆஃப் காமர்ஸ் கட்டிடத்தில் 30 ஆண்டுகளாக செய்தித்துறையில் பணியாற்றி மறைந்த மூத்த செய்தியாளர் சுப்பிரமணியனுக்கு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

புதுச்சேரி அச்சு மற்றும் தொலைக்காட்சி பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணன், காரைக்கால் மாவட்ட திமுக அமைப்பாளரும் திமுக சட்டமன்ற உறுப்பினருமான முன்னாள் அமைச்சர். நாஜிம், சுயேட்சை சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சிவா காரைக்கால் துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் செய்தி மற்றும் விளம்பரத்துறையின் உதவி இயக்குனர் குலசேகரன் மற்றும் அனைத்து கட்சி பிரமுகர்கள் பங்கேற்று அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்தும் மலர் தூவியும் மரியாதை செலுத்தினர்.

இதன்பின்னர் மறைந்த மூத்த செய்தியாளர் சுப்பிரமணியனுக்கு அவரது உறவினர்கள் முன்னிலையில் புகழஞ்சலி செலுத்தினர். நினைவேந்தல் நிகழ்ச்சியில் காரைக்கால் மாவட்ட செய்தியாளர்கள் மற்றும் அனைத்து கட்சி பிரமுகர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு சார்பில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி



ஈரோடு, ஏப். 18 –
ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை மற்றும் வடக்கு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை சார்பாக ரமலான் மாத இப்தார் நிகழ்ச்சி ஈரோடு பவானி சாலையில் உள்ள கே.கே.எஸ்.கே.மஹாலில் தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் எம்.ஜவஹர் அலி தலைமையில், ஈரோடு மாவட்ட அரசு காஜி எம். முகமது கிபாயத்துல்லாஹ் பிரார்த்தனை (துவா) செய்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில தலைவர் முனைவர் ஜெ.அஸ்லம்பாஷா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை தலைவர் பொறியாளர் இ.மாப்பிளை மீரான், மாநில ஒருங்கிணைப்பாளர் ஜுபைர் அஹமது, வடக்கு மாவட்ட சிறுபான்மை துறை தலைவர் ஜஹாங்கீர்,மாவட்ட சிறுபான்மைத்துறை துணைத்தலைவர் கே.என்.பாஷா, மாவட்ட ஊடகப்பிரிவு தலைவர் ம.முகமது அர்சத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் பொறுப்பாளர் டி.திருச்செல்வம், மாவட்ட துணை தலைவர் ராஜேஷ், மேயர் செல்வராஜ், சண்முகம், விடுதலை சிறுத்தைகள் சௌஜன், திராவிட கழகம் மாரிமுத்து, மனிதநேய மக்கள் கட்சியை சார்ந்த சலீம், இலியாஸ் ஈரோடு மாநகராட்சி பாஸ் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

காங்கிரஸ் சார்பில் மாவட்ட துணை தலைவர் எம்.ஆர்.அரவிந்தராஜ், முன்னாள் பாராளுமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர் கே.விஜய்கண்ணா, இரா. கனகராஜன், ஏசி.சாகுல் ஹமித், கதிர்வேலு மாவட்ட சேவா தள வட்ட பொது செயலாளர்களான மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவர் ஞானதீபம், சேவா தளம் பேபி, முன்னவர் மகமது கப், மாநகர் உறுப்பினர் அன்னபூரணி, மற்றும் வார்டு தலைவர்களான பிராமண பெரிய அக்ரகாரத்தை சார்ந்த இஸ்மாயில், இப்ராஹீம், சூரம்பட்டி விஜயகுமார், வேன் ராமசாமி, மஞ்சள் மண்டி ராஜகோபால், குளம் சபீர் அகமது, இளைஞர் காங்கிரஸ் லைன் இப்ராஹிம், பிராமணப் பெரிய அக்ரஹாரம் கார்த்தி, ராஜாஜிபுரம் குமரேசன் மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டனர். நிறைவில் பிராமண பெரிய அக்ரஹாரம் டி.எம்.ஐ சபீர் அலி நன்றி உரை வழங்கினார்.

# சர்வதேச சிறுதானிய ஆண்டை முன்னிட்டு சிறுதானிய உற்பத்தி பற்றிய ஒரு நாள் பயிற்சி கலெக்டர் பங்கேற்பு



காரைக்கால், ஏப்,18
காரைக்காலில் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் சர்வதேச சிறுதானிய ஆண்டை முன்னிட்டு சிறுதானிய உற்பத்தி பற்றிய ஒரு நாள் பயிற்சி பணிமனை காரைக்கால் மாவட்ட வேளாண் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு நேற்று நடைபெற்றது.

உளவியல் துறை பேராசிரியர் அழ. நாராயணன் வரவேற்புரை ஆற்றினார். ஒரு நாள் பயிற்சி பணிமனையை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் ஏ. குலோத்துங்கன், தலைமையேற்று குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். அவர் தனது உரையில் மூன்று முக்கிய கருத்துக்களை கூறினார். சிறுதானியங்களால் உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது என்றும் சிறுதானிய உற்பத்தியை மேம்படுத்துதல் மட்டுமல்லாமல் பொதுமக்கள் சிறு தானிய உணவுகளை அதிக அளவு உட்கொள்ளும் வகையில் மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை அறிவுறுத்தினார்.

உலக அளவில் சிறுதானிய உற்பத்தியில் இந்தியா முன்னோடியாக திகழ்கிறது என்றும் 2023 ஆம் ஆண்டு ஐநா சபையில் சிறுதானிய ஆண்டாக அறிவிக்க இந்தியா விடுத்த கோரிக்கையை 72 நாடுகள் ஏற்றுக் கொண்டது எனவும் இதன் மூலம் இந்தியா முன்னோடியாக திகழ்கிறது என்றும் கூறினார். மேலும் கல்லூரி முதல்வர் முனைவர். ஆ. புஷ்பராஜ் இந்த பணிமனையின் நோக்கத்தையினையும் சிறுதானிய பயிர்கள் மற்றும் உணவுப் பொருட்களை சந்தைப்படுத்துதலின் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

காரைக்கால் மாவட்ட கூடுதல் வேளாண் இயக்குனர் திரு. ஜெ. செந்தில்குமார் தனது உரையில் காரைக்காலில் நெல்லுக்கு மாற்றுப் பயிராக சிறுதானிய பயிர்கள் பயிரிடுவதில் உள்ள இடர்பாடுகளையும் அவற்றை நிவர்த்தி செய்து சிறு தானிய உற்பத்தியை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பங்களின் அவசியத்தையும் பற்றி விளக்கினார். இந்த பயிற்சி பணிமனையில் சிறு தானியங்களின் முக்கியத்துவம் உழவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் சிறுதானிய உணவுகளை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஆகிய தொழில்நுட்ப உரைகளை தொழில்நுட்ப வல்லுநர்கள் வழங்கினர். விழாவில் வேளாண் பொருளியல் மற்றும் விரிவாக்கத் துறை தலைவர் முனைவர். என். சுவாமிநாதன் நன்றியுரை வழங்கினார்.

## இஸ்லாமியர்கள் நாடாளுமன்ற தேர்தலில்

# திமுக கூட்டணியினரை வெற்றிபெற செய்ய வேண்டும் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேச்சு



ஆலந்தூர், ஏப். 18 –
சென்னை, ஆலந்தூரில் திமுக சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நடைபெற்ற இந்த மத நல்லிணக்க நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில், மனிதநேய மக்கள் கட்சி, எஸ்.டி.பி.ஐ கட்சி உள்ளிட்ட பல்வேறு இஸ்லாமிய அமைப்புகளை சேர்ந்தவர்கள், கிறித்தவ பாதிரியார், வணிகர் சங்கத்தினர் என பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர்.

அப்போது ஏழை, எளிய இஸ்லாமியர்கள் ஆயிரம் பேருக்கு புடவை, லுங்கி, மளிகை பொருட்கள் தொகுப்பு என ரம்ஜான் பரிசு பொருட்களை குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார்.

அப்போது பேசிய அமைச்சர் தா.மோ. அன்பரசன், மோடியின் பாசிச ஆட்சியை தூக்கி எறிய இஸ்லாமியர்கள் நாடாளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணியினரை வெற்றிபெற செய்திட வேண்டும் என்றார்.

இஸ்லாமியர்களுக்கு கலைஞர் ஆட்சி காலம் முதலே தேவைகளை அறிந்து பல்வேறு திட்டங்களை அரசு வழங்கி வருகிறது, அதன் தொடர்ச்சியாக திமுக தலைவரும் முதலமைச்சரும் மோடி ஆட்சியில் குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினர், அதுபோல் 6 கோடி மதிப்பீட்டில் பள்ளி வாசல்கள், மசூதிகளை சீரமைக்கவும், 20 ஆண்டுகள் பணி செய்த உலாமாக்களுக்கு ரூ.3,000 ஓய்வூதியம் என 1399 பேருக்கும், ஹஜ் பயணிகளுக்கு 10 கோடி, பணியில் உள்ள உலாமாக்களுக்கு மிதிவண்டி, சென்னை, கோவையில் சிறுபான்மையினருக்கு கல்லூரி என அறிவித்துள்ளார் முதல்வர் என்றார்.

# மயிலாடுதுறை மாவட்ட திமுக சார்பில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி எம்எல்ஏ நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்தார்



மயிலாடுதுறை, ஏப். 18 –
மயிலாடுதுறை மாவட்டம், வல்லாளகரம் தனியார் திருமண மண்டபத்தில் தொழிலதிபர் பாரூக் மற்றும் திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஹேப்பி Z.அர்சத் ஏற்பாட்டில் மும்மதத்தினர் சேர்ந்து ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான முருகன் கலந்து கொண்டு இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் ஆகியோர் கலந்து கொண்டு இப்தார் நோன்பு திறந்தனர்.

இதில் தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் ஸ்ரீதர், திமுக தலைமை அலுவலக மயிலாடுதுறை தொகுதி பொறுப்பாளர் ஜித்தன் ராஜரத்தினம், மயிலாடுதுறை சவேரியார் திருச்சபை பங்குத்தந்தை மைக்கேல் ஜாக்சன், தருமபுரம் ஆதீனம் கட்டளை தம்புரான் சாமிகள், அல்ஹாஜ் முகமது இஸ்மாயில் பாகவி ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தக அணி பொறுப்பாளர் எஸ்.எம்.சம்சுதீன், ஒன்றிய செயலாளர்கள் முருமணி, இமயநாதன், இளையபெருமாள், மூவலூர் மூர்த்தி, எம்.அப்துல்மாலிக், அமுர்த விஜயகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.சித்திக், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் செல்வராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சிவதாஸ் மற்றும் திமுக நிர்வாகிகள், இஸ்லாமியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# டேனிஷ் கோட்டையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஓசோன் செறிவு மண்டல விழிப்புணர்வு : ஆட்சியர் மகாபாரதி, எம்எல்ஏ நிவேதா முருகன் பங்கேற்பு






தரங்கம்பாடி, ஏப். 18 –
மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா டேனிஷ் கோட்டையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஓசோன் செறிவு மண்டல விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மகாபாரதி, பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் ஆகியோர் கலந்துகொண்டு ராட்சத பலூன்களை பறக்க விட்டனர்.

ஓசோன் செறிவு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி பேசும்போது, மயிலாடுதுறை மாவட்டத்தில் இரண்டு சுற்றுலா தளங்கள் உள்ளன. ஒன்று பூம்புகார் சுற்றுலா தளம், மற்றொன்று தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை ஆகும். தமிழ்நாடு முதலமைச்சரின் சீரிய முயற்சியினால் பூம்புகார் சுற்றுலா தளம் 24 கோடி செலவில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

அதேபோல தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை மேம்படுத்தும் பணி மிக விரைவில் தொடங்கப்படும். தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை சுற்றுலா தளம் டேனியர்கள் கட்டிய பழமை வாய்ந்த கோட்டையாகும். தற்போது அருங்காட்சியமாக உள்ளது. மேலும் இங்கே கடற்கரையில் ஓசோன் காற்று அதிகம் வீசப்படுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இத்தகைய தரங்கம்பாடி சுற்றுலா தளத்தை பிரபலப்படுத்தும் விதமாக இன்றைய தினம் ஓசோன் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இந்தியாவில் ஓசோன் காற்று அதிகமாக வீசப்படும் கடற்கரையாக தரங்கம்பாடி கடற்கரை திகழ்கிறது. ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களில் அதிகமாக காற்று வீசுகிறது. இக்காற்று ஒரு வித நறுமணமும் குளிர்ச்சியாக ஈரப்பதத்துடன் இருக்கும். இந்த ஓசோன் காற்றை சுவாசித்தால் நல்ல மருந்தாகவும் உடல் நலம் ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

சுற்றுலா பயணிகள் ஓசோன் காற்றை சுவாசிப்பதற்காக தரங்கம்பாடி கடற்கரைக்கு அதிகமாக வருகை புரிகின்றனர். சுற்றுலா பயணிகள் அனைவருக்கும் தெரியும் பொருட்டு இன்றைய தினம் ஓசோன் விழிப்புணர்வு நிகழ்ச்சியாக ராட்சத பலூன்கள் பறக்க விடப்பட்டன. இயற்கை உருவாக்க மரக்கன்றுகள் நடப்பட்டன. இங்கு உள்ள கழிப்பிடம் நவீன கழிப்பிடமாக மாற்றப்படும். தரங்கம்பாடி பேரூராட்சி தூய்மையான பேரூராட்சியாக செயல்படுகிறது. இங்கு உள்ள தூய்மை பணியாளர்கள் சிறப்பாக செயல்படுகின்றனர்.

இங்கு 1306 இல் சிவன் கோயில் கட்டப்பட்டுள்ளது. நாயக்கர் மகால் உள்ளது. தரங்கம்பாடி கடற்கரையில் இயந்திரம் மூலம் தூய்மைப்படுத்தும் பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் மூலம் சுற்றியுள்ள குப்பைகளை அகற்றலாம். ஓசோன் என்பது ஆக்சிஜனின் மூலக்கூறாகும். தூய்மை பணி மேற்கொள்ள பொது மக்களின் ஒத்துழைப்பும் அவசியமான ஒன்றாகும். சுற்றுலா பயணிகள் இங்கு அதிகமாக வந்து செல்வதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், மாவட்ட சுற்றுலா அலுவலர் அரவிந்த் குமார், பேரூராட்சிகள் உதவி இயக்குனர் மாதவன், மீன்வளத்துறை உதவி இயக்குனர் ராஜேஷ், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி, செம்பனார் கோயில் ஒன்றிய குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், ஒன்றிய செயலாளர்கள் எம். அப்துல் மாலிக், அமுர்த விஜயகுமார், தரங்கை பேரூர் திமுக செயலாளர் முத்துராஜா, மணல்மேடு பேரூராட்சி தலைவர் கண்மணி, குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கீதா, தரங்கம்பாடி பேரூராட்சி துணைத்தலைவர் பொன். ராஜேந்திரன், தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் கமலக்கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மாவீரன் கே.சுந்தரலிங்கம் 253 வது பிறந்தநாள் விழா



சென்னை , ஏப். 18 –
மாவீரன் கே.சுந்தரலிங்கம் அவர்களின் 253 வது பிறந்தநாளை முன்னிட்டு, நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் ஏழை-எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கும் விழா, சென்னை, தாம்பரத்தை அடுத்த காமராஜபுரம் பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்றது தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாவீரன் சுந்தரலிங்கனாருக்கு புகழ் அஞ்சலி செலுத்தி, ஏழை-எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தாம்பரம் மாநகராட்சியின் 3 வது மண்டல குழு தலைவர் லயன் எம். ஜெ.இ. ஜெயபிரதீப் சந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாவீரன் சுந்தரலிங்கனாருக்கு புகழஞ்சலி செலுத்தினார். ஜி.கண்ணையா மாவீரன் சுந்தரலிங்கனாரின் திருஉருவப்படத்தினை திறந்துவைத்து மலரஞ்சலி செலுத்தினார்.

விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேவேந்திரகுல வேளாளர் பொது நல சங்கத்தின் தலைவர் எம்.பால்சாமி, பொதுச்செயலாளர் லயன் டாக்டர் பி.சிவகுமார், பொருளாளர் கோ.இன்பநேசன், சங்க ஆலோசகர் மற்றும் முன்னாள் மாவட்ட பதிவாளர் எஸ்.பாலு, சட்ட ஆலோசகர் ஹரி கிருஷ்ணன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். இந்த நிகழ்வில், சங்கத்தின் செயற்குழு, பொதுக்குழு, சட்ட ஆலோசகர்கள், சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் ஓய்வு பெற்ற பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம்



புதுக்கோட்டை, ஏப்.18-

ஓய்வுபெற்ற பள்ளி கல்லூரி ஆசிரியர் நலச்சங்கம் சார்பில் மாநிலம் தழுவிய மாவட்டத்தலை நகரங்களில்போராட்டம் புதுக்கோட்டை திலகர் திடலில் மாவட்டத்தலைவர் இரா. சரவணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணைச்செயலாளர் ஆ. கணேசன் வரவேற்புரை ஆற்றினார், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் தி. சிதம்பரம் தொடக்க வுரையாற்றினார், தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர்சங்கம்மாவட்ட இணைச்செயலாளர் அ. மணவாளன், அகில இந்திய ஓய்வுபெற்ற இன்சூரன்சு ஊழியர் சங்க மாவட்ட நிருவாகி ரஹ்மான் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஓய்வுபெற்ற பள்ளி, கல்லூரிஆசிரியர்நலச்சங்க மாவட்டச்செயலாளர் கா. ஜெயபாலன் ஓய்வூதுயர்களின் கோரிக்கைகளை பற்றி விளக்கிப்பேசினார், 19.04.2023 சட்டமன்றத்தில் ஓய்வூதியர்களின் மானியக்கோரிக்கை மீது விவாதம் நடைபெறும் நிலையில் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக அகவிலைப்படி உயர்வை நிலுவையின்றி வழங்கவேண்டும், 70 வயதானவர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம் 10% வழங்கவேண்டும், பழைய பென்சன் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும், மூத்தகுடி மக்களுக்கு சென்னையில் வழங்குவது பேருந்து பயண கட்டணச்சலுகை வழங்க வேண்டும்,சிகிச்சைக்கான முழுச்செலவையும் காப்பீட்டு நிறுவனம் வழங்கவேண்டும், குடும்பநல நிதியை இரண்டு லட்சமாக உயர்த்திவழங்கவேண்டும், மருத்துவப்படியை மத்திய அரசுபோல் ரூ 1000 /- வழங்கவேண்டும் உள்ளிட்ட 10 அம்சக் கோரிக்கைகளை விளக்கிப்பேசினார்.

மாவட்ட நிர்வாகிகள் ஜி. சரஸ்வதி, கும. திருப்பதி, அ. கருப்பையா புதுக்கோட்டை வட்ட நிர்வாகிகள் சி. பாலையா, சுப. காந்திநாதன், இரா. சிவகுருநாதன் திருமயம் வட்ட நிர்வாகிகள் பெரி. இராமு, பழ. அழகப்பன், ஜி. கிருஷ்ணமூர்த்தி, குளத்தூர்வட்டத்தலைவர் முருகேசன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர், மாவட்டப்பொருளாளர் கிருஷ்ணன் நன்றியுரையாற்றினார், 5 பெண் ஓய்வு ஆசிரியர்கள் உட்பட 58 ஓய்வாசிரியர்கள் பங்கேற்றனர்.



சாத்தூர் புனித ஸ்தனிஸ்லாஸ் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் 1987- 89 ஆம் ஆண்டு படித்த முன்னாள் மாணவர்கள் இன்றைய ஆசிரியர்கள், பள்ளி தலைமை ஆசிரியர் சகோதரர் ஜேம்ஸ் வில்லியம்ஸ் பள்ளிக்கு ஒலிபெருக்கி சாதனங்களை வழங்கினர்.

# அறந்தாங்கி செலக்சன் கல்வி குழுமத்தின் சார்பாக இப்தார் விருந்து நிகழ்ச்சி



அறந்தாங்கி, ஏப்.18-

அறந்தாங்கிசெலக்சன் கல்வி குழுமத்தின் சார்பாகநேற்று சிறப்பாக நடைபெற்ற இப்தார் விருந்து நிகழ்ச்சியில் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர், இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்.

பள்ளி தாளாளர் கண்ணையன் தலைமையில் நடைபெற்ற நோன்பு திறப்பு விழாவில் அறந்தாங்கி நகர்மன்ற தலைவர் ஆனந்த் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் அறந்தாங்கி ஜமாத் தலைவர் சேக்அப்துல்லா, அறந்தாங்கி நகர்மன்ற துணைத் தலைவர் முத்து வர்த்தகசங்கத் தலைவர் காமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இந்த நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக ரோட்டரி கிளப் தலைவர் பிரேம்குமார் ரோட்டரி சங்கங்களின் தலைவர்கள் விகாஸ் சரவணன், செந்தில்குமார் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் முபாரக்அலி, வரதராஜன் கிரீன்முகமது அறந்தாங்கி ரோட்டரி சங்க முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள் வர்த்தக சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முன்னதாக நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் பள்ளி முதல்வர் சுரேஷ் குமார் வரவேற்றார்.

# கந்தர்வகோட்டையில் நிழல் இல்லா நாள் அறிவியல் நிகழ்வு கடைபிடிப்பு



கந்தர்வகோட்டை, ஏப். 18-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் நிழல் இல்லா நாள் அறிவியல் நிகழ்வு நேற்று மதியம் 12:13 மணி அளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வினை அரசு உயர்நிலைப்பள்ளி வெள்ளாள விடுதி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள் அக்கச்சிப்பட்டி, கந்தர்வகோட்டை மட்டங்கால், வேம்பன்பட்டி, காட்டுநாவல், தொடக்க பள்ளி தெற்கு வாண்டான் விடுதி (தெற்கு) உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாணவ, மாணவிகள் கண்டுகளித்தனர். கந்தர்வகோட்டை பகுதிகளில் ஏற்பட்ட நிழல் இல்லா நாள் குறித்து தமிழ்நாடு அறிவியல் இயக்க வட்டாரத் தலைவர் ரகமதுல்லா பேசும் போது நிழல்கள் என்பது நம்மை என்னாலும் பின் தொடரும் அறிவியல் நிகழ்வு. இந்த நிழல் இல்லா நாள் வருடத்திற்கு இரண்டு முறை மட்டும் ஒரு சில மணித்துளிகளுக்கு நம்மை பின் தொடராது, அந்த நாளை தான் நாம் நிழல் இல்லாத நாள் என்கிறோம். இந்த அறிவியல் நிகழ்வு கந்தர்வகோட்டை பகுதிகளில் நேற்று சரியாக12.13 மணியளவில் ஏற்பட்டது.

இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு அறிவியல் இயக்க பிரச்சார கந்தர்வகோட்டை குழுவின் சார்பில் மாவட்ட இணைச் செயலாளர் துரையரசன், வட்டார செயலாளர் சின்ன ராஜா பொருளாளர் கண்ணன் ஆகியோர் செய்திருந்தனர். இந்நிகழ்வில் அரசு உயர்நிலைப்பள்ளி வெள்ளாவிடுதி தலைமை ஆசிரியர் பொறுப்பு முத்துராமன், அறிவியல் ஆசிரியர் யோகவேல், அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வி, கந்தர்வக்கோட்டை நடுநிலைப்பள்ளிதலைமை ஆசிரியர் விஜயலட்சுமி ஆசிரியர்கள் மணிமேகலை, சிந்தியா, தனலெட்சுமி, ஜாய்ஸ் ராணி ஆகியோர் பங்கேற்றனர்.

# கீழப்புலியூரில் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி



தென்காசி, ஏப்.18-

தென்காசி அருகே உள்ள கீழப்புலியூர் நாடார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட மண்டபத்தில் வைத்து தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தென்காசி ஒன்றியத் தலைவர் ராஜ் நயினார் தலைமை வகித்தார், கிளைத் தலைவர் முத்து நயினார் முன்னிலை வகித்தார், இந்த நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு எஸ். லூர்து நாடார், பொதுச் செயலாளர் ஆனந்த் காசிராஜன், பொருளாளர் சுப்பிரமணியன், ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டையினை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் துணைச் செயலாளர் ஜான் டேவிட், தென்காசி தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் மோகன், வேலையா குமரேசன் ,காமராஜ், நடராஜன், வேலுச்சாமி, மாரியப்பன், ரத்தினசாமி மற்றும் நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர், முடிவில் சுப்பிரமணியன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# மதூதியை அகற்றக் கோரிய வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்தது சென்னை ஐகோர்ட்

சென்னை, ஏப். 18-

சென்னை புரசைவாக்கம், பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் செயல்பட்டு வரும் ரப்பானியா அரபு கல்லூரியில் அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் மசூதியை அகற்றக்கோரிய வழக்கை 25 ஆயிரம் ரூபாய் அபராதத்துடன் தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், திருப்பூரைச் சேர்ந்த வழக்கறிஞரும், இந்து முன்னேற்ற கழகத் தலைவருமான கோபிநாத் தாக்கல் செய்த மனுவில், "சென்னை புரசைவாக்கம், பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் செயல்பட்டு வரும் ரப்பானியா அரபு கல்லூரியில், மாநகராட்சியின் அனுமதியின்றி மசூதி கட்டப்பட்டு வருகிறது.

ஒரு மத வழிபாட்டுத் தலத்துக்கு அருகில் மற்றொரு மத வழிபாட்டுத்தலம் கட்டுவதை தடை செய்ய வேண்டும்என ஓய்வுபெற்ற நீதிபதி வேணுகோபால் பரிந்துரைத்துள்ளார். ஆனால், அரபி கல்லூரியில் இருந்து நூறு மீட்டர் தூரத்தில் 400 ஆண்டு பழமையான சிவன் கோயில் உள்ளது. எனவே, அரபிகல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மசூதி கட்டுமானங்களை அகற்ற உத்தரவிட வேண்டும்" எனக் கோரியிருந்தார்.

இந்தவழக்குபொறுப்பு தலைமை நீதிபதி ராஜா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு பிளீடர் பி.முத்துக்குமார் ஆஜராகி, "கல்லூரி வளாகத்தில் வழிபாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் மசூதி கட்டப்படுகிறது. திருப்பூரை அடிப்படையாகக்கொண்ட மனுதாரர் சென்னையில் மசூதி கட்டப்படுவதை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளதில் வேறு ஏதோ உள்நோக்கம் இருப்பதாக தெரிகிறது. எனவே, இந்த மனுவை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும். இதுபோன்ற வழக்குகளைத் தொடர மனுதாரருக்கு தடைவிதிக்க வேண்டும்" என்று வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், பொதுநல நோக்குடன் இந்த வழக்கு தொடரப்படவில்லை எனக் கூறி, 25 ஆயிரம் அபராதத்துடன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# வாறுகால் மற்றும் சாலை அமைத்திட அமைச்சர் கே.என்.நேருவிடம் மாவட்டச் செயலாளர் சிவபத்மநாதன் கோரிக்கை மனு



தென்காசி, ஏப்.18-

சென்னை தலைமை செயலகத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே .என் நேருவை தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதன் நேரில் சந்தித்து செங்கோட்டை ஒன்றியம் புதூர் பேரூராட்சி கட்டளை குடியிருப்பு முதல் ரயில்வே லைன் வரை வாறுகால் மற்றும் சாலை அமைத்திடவும் ரூபாய் ஒரு கோடியே 90 லட்சம் நிதி வேண்டியும், அச்சன்புதூர் பேரூராட்சி அடவி நயினார் அணைக்கட்டுக்கு செல்லும் பாதை, அச்சன்கோவில் செல்லும் சாலை சரி செய்யவும் சாம்பவர் வடகரை பேரூராட்சி பகுதிகளில் தார்சாலை வாறுகால் அமைத்திடவும் கோரிக்கை மனுக்களை வழங்கினார்.

உடனடியாக அமைச்சர் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்து அனுப்பினார், இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜேசு ராஜன், ஆறுமுகசாமி, மாவட்ட அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம், செங்கோட்டை நகரச்செயலாளர் வெங்கடேசன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் சாமித்துரை, வழக்கறிஞர்கள் ஏ.பி. அருள், ஹரி கிருஷ்ணன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் சேக் முகம்மது, உதயநிதி நற்பணி மன்ற துணைச் செயலாளர் அருணண், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் மாரியப்பன், கடையநல்லூர் ஒன்றிய திமுக செயலாளர் காசி தர்மம் துரை, முன்னாள் பொதுக் குழு உறுப்பினர் சக்தி, மாவட்ட வர்த்தக அணி டால்டன், வெய் காலிபட்டி பரமசிவம், மாவட்ட பிரதி நிதி ஸ்டீபன் சத்யராஜ், காளிராஜ், ரோஜா முருகன், திருமலைக் குமார், உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிக் பள்ளியில் ஆணழகன் போட்டி



புதுக்கோட்டை, ஏப்.18-

புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் பள்ளிகளின் நிறுவனர் தலைவர் ஜெயபரதன் செல்லையா நினைவு தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட அமெச்சூர் ஆணழகன் சங்கம் இணைந்து மாவட்ட அளவிலான உடற்கட்டமைப்பு போட்டியை, புதுக்கோட்டையில் நடத்தியது. பல்வேறு உடற்பயிற்சி கூடங்களிலிருந்து உடலமைப்பாளர்கள் பல்வேறு பிரிவுகளில் பங்கேற்றனர்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் இந்நிகழ்ச்சியானது துவங்கியது, வழக்கறிஞர் ஜவஹர் வரவேற்புரை வழங்கினார், மௌண்ட் சீயோன் பள்ளிகளின் தலைவர் ஜோனத்தன் ஜெயபரதன் சிறப்பு விருந்தினர்களையும், சிறப்பு அழைப்பாளர்களையும் வரவேற்று கௌரவித்தார், புதுக்கோட்டை மாவட்ட அமெச்சூர் ஆணழகன் சங்க முன்னாள் செயலாளர் ஜி.துரைராஜனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியானது புதுக்கோட்டை மாவட்ட அமெச்சூர் ஆணழகன் சங்கத் தலைவர் ஜோனத்தன் ஜெயபரதன் செயலாளர் சு.கிருஷ்ணமுனி, பொருளாளர் ஏ.பாஸ்கரன், ஆகியோர்களால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது.

யூ ஜின் ஜிம் பி.மணிமுத்து மிஸ்டர் புதுக்கோட்டை பட்டத்தினை தட்டிச்சென்றார், அவருக்கு ரூ.10000 பரிசு வழங்கப்பட்டது, அர்ணால்ட் ஜிம் எம். லக்ஸ்மணன் இரண்டாம் பரிசு பெற்றார், அவருக்கு ரூ.5000 பரிசு வழங்கப்பட்டது. மென் பிசிக் பிரிவில் ஆர்வி ஜிம் பி.சஞ்சய் முதல் பரிசு பெற்றார். அவருக்கு ரூ.5000 பரிசு வழங்கப்பட்டது, வெற்றி பெற்றவர்களை திமுக வடக்கு மாவட்ட செயலாளர் மு.மு. செல்லபாண்டியன் பரிசு வழங்கி கௌரவித்தார், இந்நிகழ்ச்சியில் மௌண்ட் சீயோன் பள்ளிகளின் துணை நிறுவனர், புளோரன்ஸ் ஜெயபரதன், கார்த்திக் மெஸ் மூர்த்தி மற்றும் அனைத்துஜிம்மாஸ்டர்கள் கலந்துகொண்டனர்.

# ஒருங்கிணைந்த பட்டதாரி நிலையிலான தேர்விற்கு விண்ணப்பிக்கலாம் புதுக்கோட்டை கலெக்டர் தகவல்

புதுக்கோட்டை, ஏப். 18-

மத்தியபணியாளர்கள் தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள ஒருங்கிணைந்தபட்டதாரி நிலையிலான தேர்விற்கு விண்ணப்பிக்கலாம் என புதுக்கோட்டை கலெக்டர் கவிதா ராமு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

மத்தியபணியாளர்கள் தேர்வாணையம் 'ஒருங்கிணைந்த பட்டதாரி நிலையிலானத் தேர்வு-2023 தொடர்பான அறிவிப்பினை 03.04.2023 அன்று வெளியிட்டுள்ளது. ஒன்றிய அரசின் பல்வேறு அமைச்சகங்கள்/துறைகள் / நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அரசியலமைப்பு சார்ந்த அமைப்புகள் / சட்டப்பூர்வ அமைப்புகள்/ தீர்ப்பாயங்கள் போன்றவற்றில் உள்ள குரூப் 'B" மற்றும் குரூப் 'C" நிலையில், 7,500-ற்கும் மேற்பட்ட பணிக்காலியிடங்களை அறிவித்துள்ளது. இத்தேர்வில் நாட்டில் உள்ள தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

பணியிடங்களின் விவரம், வயது வரம்பு, தேவையான கல்வித் தகுதி, செலுத்தவேண்டிய கட்டணம், தேர்வுத் திட்டம், விண்ணப்பிக்கும் முறை போன்ற விவரங்கள் ஆள்சேர்ப்பு அறிவிப்பில் விரிவாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விவரங்கள் https://ssc.nic.in/SSCFileServer/PortalManagement/UploadedFiles/noticeCGLE03042023.pdf என்ற இணையதள முகவரியிலும் உள்ளது. இப்பணிக் காலியிடங்களுக்கு www.ssc.nic.in என்ற பணியாளர் தேர்வாணையத்தின் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். கணினி அடிப்படையிலான இத்தேர்வுகளுக்கு உரிய கட்டணத்துடன் இணைய வழியாக விண்ணப்பிக்க கடைசி நாள் 03.05.2023 மற்றும் ஆன்லைனில் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள் 04.05.2023 ஆகும்.

தென் மண்டலத்தில், கணினி அடிப்படையிலான தேர்வு, ஜூலை 2023ல் ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் 10 மையங்களிலும், புதுச்சேரியில் 01 மையத்திலும், தமிழ்நாட்டில் 07 மையங்களிலும், தெலுங்கானா மாநிலத்தில் 03 மையங்களிலும் ஆக மொத்தம் 21 மையங்கள் / நகரங்களில் நடைபெற உள்ளது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் செயல்படும் தன்னார்வப் பயிலும் வட்டங்களில் பணியாளர் தேர்வாணைய போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நேரடியாக நடத்தப்படவுள்ளன. இத்தேர்விற்கான பாடத்திட்டங்கள் மற்றும் பாடக்குறிப்புகள் தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் (https://tamilnaducareerservices.tn.gov.in/) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்விணையதளத்தில் 'TN Career Services Employment' மற்றும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் 'AIM TN' என்ற YouTube Channel-களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள இத்தேர்விற்கான காணொளிகளை கண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டவேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் சார்பாக இத்தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள் 20.04.2023 அன்று முதல் உரிய திட்டநிரல் மற்றும் கால அட்டவணைப்படி சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நேரடியாக புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் துவங்கப்படவுள்ளது. இப்பயிற்சியின் போது இலவசமாக பாடக்குறிப்புகளும் இவாரந்தோறும் மாதிரி தேர்வுகளும் நடத்தப்படும்.

இத்தேர்வினை புதுக்கோட்டை மாவட்ட இளைஞர்கள் அதிகளவில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது. இத்தேர்விற்கு விண்ணப்பித்து இலவச பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விருப்பமுள்ள மனுதாரர்கள் தங்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண் விவரத்தினை decgc.pki@gmail.com என்ற மின்னஞ்சல்மூலமாகவோ அல்லது 04322-222287 என்ற தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பதிவு செய்து பயன்பெறலாம் என அதில் தெரிவித்துள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# ஓஎன்ஜிசி நிறுவனத்தில் மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் ஏ.பி.மகாபாரதி நேரில் ஆய்வு



கொள்ளிடம், ஏப். 18 –
மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் அருகே உள்ள பழையபாளையம் கிராமத்தில் இயங்கி வரும் ஓஎன்ஜிசி நிறுவனத்தை மாவட்ட கலெக்டர் மகாபாரதி நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் இது குறித்து நிருபர்களிடம் கூறுகையில், தொழில்துறைசெயலாளர் அறிவுறுத்தலின் பேரில் பழைய பாளையம் கிராமத்தில் ஓஎன்ஜிசி நிறுவனத்தின் செயல்பாடுகளையும் தடையின்மை சான்று பெறாமல் இயக்கத்தில் இருக்கும் துறப்பன கிணறுகளின் நிலைப்பாடு பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் நிறுவனத்தில் பயன்பாடின்றி வீணாக எரிந்து கொண்டிருக்கும் இயற்கை எரிவாயுவை கெயில் நிறுவனத்தினர் பயன்படுத்துவது தொடர்பான சாத்தியக்கூறுகள் மற்றும் கடலோர பாதுகாப்பு மண்டலத்தில் அமையப் பெற்றுள்ள எரிவாயு குழாய்களின் திட்டம் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றார்.

மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர் தமிழ்ஒலி, சீர்காழி தாசில்தார் செந்தில்குமார் மற்றும் ஓஎன்ஜிசி அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### மத்திய-மாநில அரசின் திட்டங்களை கூறி

# மாணவர்களை பள்ளிக்கு அனுப்ப பெற்றோர்களுக்கு சப்–இன்ஸ்பெக்டர் அறிவுறுத்தல்



திருவள்ளூர், ஏப். 18 –
திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், பெண்ணாலூர்பேட்டை காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பரமசிவன் நேற்று காலை சுமார் 11 மணி அளவில் ரோந்து பணி மேற்கொண்டார். பெண்ணாலூர்பேட்டை ஊராட்சியை சேர்ந்த திடீர் நகர் பகுதியில் சுமார் 50 பழங்குடியின மக்கள் தங்களது குடும்பத்துடன் வசித்து வருகின்றனர். இவர்கள் தங்களது பிள்ளைகளை சரிவர பள்ளிக்கு அனுப்பவில்லை என்பதைஇவர் அறிந்தார்.

இதனால் தமிழக அரசு பள்ளி மாணவர்களுக்கு ஐந்து நாட்கள் முட்டை வழங்குகிறது. இரண்டு நாட்கள் பயறு வகைகளை வழங்குகிறது. காலை மற்றும் மதியம் இலவச உணவு வழங்குகிறது. மேலும் எஸ்.எஸ்.ஏ என்ற மத்திய அரசின் திட்டத்தின் கீழ் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை 14 வயது வரையில் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று சட்டம் உள்ளது. அவ்வாறு தங்களது பிள்ளைகளை அனுப்பாத பெற்றோர்களை தண்டிக்கவும் சட்டம் உள்ளது என்று கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

மேலும்இடைநிறுத்தம் தவிர்த்து தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் என்று மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் அறிவுறுத்தினார். மேலும் மாணவர்கள் படிக்க சப் இன்ஸ்பெக்டர் ஆகிய என்னால் முடிந்த உதவியை செய்ய தயாராக உள்ளதாகவும், யாரிடமாவது யாசகம் கேட்டாவது உதவிசெய்ய தயாராக உள்ளதாக அவர் கூறினார். எந்த உதவி வேண்டுமானாலும் 24 மணி நேரமும் காவல் நிலையத்திற்கு வரலாம் என்று கூறினார்.

இவரது இச்செயல் அப்பகுதி மக்களிடையே பெரும் பாராட்டை பெற்றுள்ளது. இவர் விழிப்புணர்வு ஏற்படுத்திய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# தமிழர் தேச கட்சி, வீர முத்தரையர் முன்னேற்ற சங்கம் சார்பில் பொதுக்கூட்டம்



ஈரோடு, ஏப். 18 –
ஈரோடு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்ற தொகுதி பேருந்து நிலையம் அருகில் தமிழர் தேசம் கட்சி /வீர முத்தரையர் முன்னேற்ற சங்கம் சார்பில் "இடப் பங்கீடு எமது உரிமை " பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு வீர முத்தரையர் முன்னேற்ற சங்கம், தமிழர் தேசம் கட்சி நிறுவனத் தலைவர் செல்வகுமார் தலைமை வகித்தார். ஈரோடுமாவட்ட பொறுப்பாளர் முருகேஷ், தொகுதி பொறுப்பாளர் நஞ்சப்பன், சக்திவேல் இளைஞர் அணி, முருகேசன்மேற்கு ஒன்றிய பொறுப்பாளர்களும், மணல் மேடு குமார், பேரூராட்சிபொறுப்பாளர் மாரப்பன், ராமசாமி, கோபால், சரவணன், ஐயப்பன், சந்திரன், முத்துராமன், பூபதி ஆகியோர் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

மேலும் அருண், பகுடுதுறை செல்வம், ஸ்ரீதர், ராசன், ராமசாமி, காளிசாமி, அஜித், கருப்புசாமி, சதிஷ் சுஜில் குட்டை பாபு, தினேஷ், பூதி குப்பை கன்னிமுத்து, கன்றா மொக்கை வார்டு கவுன்சிலர் சரவணன், பொங்கியன், கருப்புசாமி, துறையான், ஆறுமுகம், அண்ணாநகர் முருகேஷ், செந்தில், மணல்மேடு சக்திவேல், குறும்ப பாளையம் சவுந்தர், தாளவாடி அருளப்பன், தங்கராஜ், வசந்தி, கருப்பம்மாள், புல்லட், ராசு, பவானிசாகர் சாந்தாள், முருகன் நகர் ரங்கன், மாரிமுத்து, தாமு தம்பி அவர்களும் கலந்து கொண்டனர்.

# சீர்காழி சட்டைநாதர் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட செப்பேடுகளை இந்து சமய அறநிலையத்துறை பதிப்பக பிரிவினர் ஆய்வு





சீர்காழி, ஏப். 18 –
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான சட்டைநாதர் கோவில் அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தர் தனது மூன்றாவது வயதில் உமையம்மை வழங்கிய ஞானப்பால் அருந்தி தேவாரத்தின் முதல் பதிகம் பாடிய தலமான கோவிலுக்கு 32 ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டு, வருகின்ற மே மாதம் 24 ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கோவிலின் மேல கோபுர வாசல் அருகே நேற்று மதியம் யாகசாலை அமைப்பதற்காக குபேர மூலையில் ஜேசிபி எந்திரம் மூலம் மண் எடுப்பதற்காக பள்ளம் தோண்டியபோது பூமிக்கு அடியில் 2 அடி ஆழத்தில் அரை அடி முதல் 2 அடி உயரமுள்ள 23 ஐம்பொன் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன.

தொடர்ந்து உடுக்கை, மணி, கலசம், சலங்கை, தீபத்தட்டு உள்ளிட்ட பூஜை பொருட்களும், திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்கள் பதிக்கப்பட்ட 410 முழுமையான செப்பேடுகளும், 83 பிண்ணப்பட்ட செப்பேடுகளும் கண்டெடுக்கப்பட்டன.

தருமபுர ஆதீனம் 27வது குரு மஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் சிலைகள் மற்றும் செப்பேடுகளை பார்வையிட்டு சிறப்பு பூஜைகளை நடத்தினார். தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் மகாபாரதி, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் மோகனசுந்தரம் மற்றும் அதிகாரிகள் கோவிலுக்கு வந்து சிலைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.


கோவில் வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட ஐம்பொன் சிலைகள், செப்பேடுகள் மற்றும் பூஜை பொருட்கள் அனைத்தும் 13-ம் நூற்றாண்டுக்கு முந்தையதாக இருக்கலாம் எனவும் இவை அனைத்தும் மதிப்பிட முடியாதவை எனவும் கூறப்பட்டது.

இதனையடுத்து சிலைகள், செப்பேடுகள் மற்றும் பூஜை பொருட்கள் அனைத்தும் வருவாய் துறையின் கண்காணிப்பில் கோவிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. இன்று சென்னையில் இருந்து சீர்காழி சட்டை நாதர் கோவிலுக்கு வந்த இந்து சமய அறநிலையத்துறை பதிப்பக பிரிவுக்கு செயல்படும் திருக்கோவில் திருமடங்களின் ஓலை சுவடிகள், செப்பேடுகள் பராமரிப்பு பாதுகாப்பு நூலாக்க திட்டப்பணி முனைவர் தாமரை பாண்டியன் அறிவுறுத்தலின்படி ஆய்வாளர்கள் சண்முகம், சந்தியா, சுவடி திரட்டுனர் விஸ்வநாதன், சுவடி பராமரிப்பாளர் பிரகாஷ் குமார் உள்ளிட்ட 6 பேர் கொண்ட குழுவினர் கோவில் வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட தேவாரப் பதிகம் பதிக்கப்பட்ட செப்பேடுகளை பார்வையிட்டு அவை எந்த ஆண்டைச் சார்ந்தது, யாரால் எழுதப்பட்டது, என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பது குறித்து ஆய்வு செய்தனர்.

முதற்கட்ட ஆய்வில் செப்பேடுகள் தலா 400 கிராம் எடையும் 68 சென்டிமீட்டர் நீளமும், 7.5 சென்டிமீட்டர் அகலமும் உடையதாக உள்ளது. கோவிலில் உள்ள கல்வெட்டுகளில் தேவாரப் பாடல்கள் செப்பேடுகளில் பதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இதுவரை செப்பேடுகள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை. முதன் முறையாக இங்கு 400 க்கும் மேற்பட்ட தேவாரம் பதிக்கப்பட்ட செப்பேடுகள் கண்டெடுக்கப் பட்டுள்ளது. கண்டெடுக்கப்பட்டுள்ள செப்பேடுகளில் என்ன பதிகங்கள் உள்ளன. புதிய தேவாரப் பதிகங்கள் ஏதேனும் உள்ளதா என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ள உள்ளோம் என தெரிவித்தனர்.

ஆய்வின்போது சீர்காழி தாசில்தார் செந்தில்குமார், கோவில் கண்காணிப்பாளர் செந்தில் குமார் ரவி ரவிச்சந்திரன் மயிலாடுதுறை இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர்கள் பத்ரி நாராயணன் ரவிச்சந்திரன் மற்றும் சீர்காழி தமிழ்ச்சங்கத் தலைவர் மார்கோனி உள்ளிட்டோர் இருந்தனர்.

# நகை வாங்க வந்த ஆந்திரா தம்பதியிடம் சென்னை ஆர்.கே.நகரில் 60 லட்ச ரூபாய் வழிப்பறி : நான்கு பேர் கைது











சென்னை, ஏப். 18 –
ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த தங்க நகை வியாபாரி கிருஷ்ணாராவ் என்பவர் தனது கடையில் வேலை பார்க்கும் ஆந்திர மாநிலம், குண்டூர் மாவட்டம், முசுல்லா தாலுகா, துர்க்கி கிராமத்தைச் சேர்ந்த 48 வயதுடைய சுப்பாராவ், அவரது மனைவி லட்சுமி இவர்களிடம் 60 லட்ச ரூபாய் பணத்தை கொடுத்து சென்னையில் உள்ள தங்க நகை வியாபாரியிடம் கொடுத்து தங்கநகைகளை வாங்கி வருமாறு கடந்த 12 ஆம் தேதி அனுப்பி உள்ளார்.

சென்னையில் உள்ள தங்க நகை கடைக்காரரர் அனுப்பிய காரில் ஏறி கொருக்குப்பேட்டை பழைய கிளாஸ் பேக்டரி ரோடு தெருவில் உள்ள ஓஸ்வால் கார்டன் அடுக்குமாடி குடியிருப்பு அருகே நின்று கொண்டிருந்தனர். அப்பொழுது தெலுங்கானா மாநிலம் பதிவு எண் கொண்ட ஒரு காரில் வந்த மர்ம நபர்கள் இருவர் சுப்பாராவ் மற்றும் அவரது மனைவியை கொலை செய்துவிடுவதாக மிரட்டி அவர்களிடமிருந்து 60 லட்ச ரூபாய் பணத்தை பறித்துக் கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

இது குறித்து சுப்பாராவ் ஆர்.கே நகர் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். வண்ணாரப்பேட்டை துணை ஆணையர் பவுன் குமார் ரெட்டி உத்தரவின் பேரில் வண்ணாரப்பேட்டை உதவி ஆணையர் இருதயம் மேற்பார்வையில் தனிப்படை அமைக்கப்பட்டு சம்பவம் நடைபெற்ற இடத்தில் விரைந்து சென்ற தனிப்படை போலீசார் அங்கு பொருத்தப்பட்டு இருந்த சிசிடிவி கேமிரா காட்சிகளை கைப்பற்றினர்.

இதனையடுத்து கார் நம்பரை வைத்து தெலுங்கானாவுக்கு சென்ற தனிப்படை போலீசார் 24 வயது உடைய வெங்கடேசன், ரமேஷ் பத்தினி, இவரது சகோதரர் மதுபத்தினி, மற்றும் பொன்னாராவ் ஆகிய நான்கு பேரையும் கைது செய்து அவர்களிடமிருந்து 20 லட்சத்து 81 ஆயிரத்து 500 ரூபாய் பணத்தையும், மற்றும் வழிப்பறிக்கு பயன்படுத்தப்பட்ட விலை உயர்ந்த காரையும் பறிமுதல் செய்தனர்.

போலீசார் நடத்திய விசாரணையில் பொன்னாரம் என்பவர் சுப்பா ராவை ஆந்திர மாநிலம் தங்க நகைகள் வியாபாரி கிருஷ்ணராவிடம் அறிமுகம் செய்து வைத்துள்ளதாகவும், அதன் பேரில் சுப்பாராவ் பணத்துடன் சென்னை செல்வதை அறிந்த பொன்னாராவ் அவரது கூட்டாளிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பொன்னாராவ் தனது நண்பரை பார்த்து வருவதாக கூறி சென்று விட்டதாகவும், இதனை அடுத்து சாலையில் தனியாக நின்று கொண்டிருந்த பொழுது மிரட்டி 60 லட்ச ரூபாய் பணத்தை பறித்து கொண்டதாகவும் போலீசார் விசாரணையில் தெரியவந்தது.

இதனை அடுத்து நான்கு பேர் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். மேலும் தலைமறைவாக உள்ள இரண்டு நபர்களை தனிப்படை போலீசார் தேடி வருகின்றனர்.

வரலாறு நாளிதழ்
நிறுவனத்தில் பணிபுரிய
ஆட்கள் தேவை
காலிப் பணிஇடங்கள் 2
PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN
தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள்
சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.
நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்
தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட
செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்
மேலும் தொடர்புக்கு :
TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534



# தன்பாலின விவகாரம் நீதிமன்றம் விசாரிக்க மத்திய அரசு எதிர்ப்பு

# சட்டசபை நிகழ்வுகள் மாற்றுத்திறனாளிகளுக்கு புதிய ஏற்பாடு





# வேலைவாய்ப்பை பெற இளைஞர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஆலோசனை


| சென்னை / புதுக்கோட்டை | 18.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

18.04.2023 செவ்வாய்

புதுவை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**தோண்டோ கேசவ் கார்வே** , இந்தியக் கல்வியாளர், செயற்பாட்டாளர் (பி.1858) (இ.1962)



**சாமிக்கண்ணு வின்சென்ட்** , தமிழகத் திரைப்பட வெளியீட்டாளர், தயாரிப்பாளர் (பி.1883) (இ.1942)



**மால்கம் ஆதிசேசையா** , இந்தியக் கல்வியாளர், பொருளியலாளர் (பி.1910) (இ.1994)



**ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை** , ஈழத்து எழுத்தாளர், பதிப்பாளர் (பி.1858) (இ.1917)



## இன்றைய நினைவு நாள்


**தாந்தியா தோபே** , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1814) (இ.1859)



**ஜி. சுப்பிரமணிய ஐயர்** , இந்திய இதழியலாளர் (பி.1855) (இ.1916)



**ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்** , நோபல் பரிசு பெற்ற செருமானிய-அமெரிக்க இயற்பியலாளர் (பி.1879) (இ.1955)



**நினைவுச்சின்னங்களுக்கும், களங்களுக்குமான அனைத்துலக நாள்**